**செய்தி வெளியீடு எண் : 94** **நாள் : 11.01.2025**

## <u>செய்தி வெளியீடு</u>

# மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் தின விழாவினையொட்டி அமைக்கப்பட்டுள்ள அயலக தமிழ்ச்சங்கங்கள், சுற்றுலா, மருத்துவம், தொழில் அரங்கங்கள் உள்ளடக்கிய கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டு, சிறப்புரையாற்றினார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (11.1.2025) சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் தின விழாவினையொட்டி அமைக்கப்பட்டுள்ள அயலக தமிழ்ச்சங்கங்கள், சுற்றுலா, மருத்துவம், தொழில் அரங்கங்கள் உள்ளடக்கிய கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டு, சிறப்புரையாற்றினார்.

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை,**

தமிழ்நாடு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பாக அயலகத் தமிழர் தின நிகழ்ச்சிகளை தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த வருடம், அயலகத் தமிழர் தின நிகழ்வுகளை 'தமிழ் வெல்லும்' எனும் கருப்பொருளில் நான்தான் தொடங்கி வைத்தேன்.

இந்த வருடம், 'எத்திசையும் தமிழணங்கே' என்ற கருப்பொருளில் இந்த விழாவை நான் தொடங்கி வைக்கின்றேன். உலகின் பல்வேறு இடங்களில் இருந்து இங்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் நம் தாய்த் தமிழ்நாட்டிற்கு வருக, வருகவென வரவேற்கிறேன்.

இந்த சிறப்புக்குரிய நிகழ்வில் நாளைய தினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பங்கேற்று நிறைவு உரை ஆற்ற உள்ளார்கள். உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களுடைய நலனை கருத்தில் கொண்டு, நம்முடைய திராவிட மாடல் அரசு, அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையை 2021 ஆம் ஆண்டு உருவாக்கியது.

இந்த துறை தொடங்கப்பட்ட நாளிலிருந்து, இதன் செயல்பாடுகளை நான் தொடர்ந்து கவனித்து கொண்டு வருகிறேன். ஒரு மாநில அரசின் துறை இந்த அளவுக்கு வெளிநாட்டில் இருக்கக்கூடிய நம் தமிழ் மக்களின்

நலனுக்காக உழைக்க முடியுமா என்று சொல்கின்ற அளவுக்கு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு இத்தனை ஆயிரம் தமிழர்கள், இங்கே பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்திருக்கிறீர்கள் என்றால் அதற்கு இத்துறையின் செயல்பாடுகளே காரணம்.

இன்றைக்கு முத்தமிழறிஞர் கலைஞருடைய வழியில் உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களுக்காக தாய்த்தமிழ்நாட்டில் இருந்து உழைத்துக் கொண்டிருப்பவர்தான், நம்முடைய முதலமைச்சர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

இங்கே அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், மலேசியா, தென் ஆப்பிரிக்கா, இலங்கை, என 50-க்கும் அதிகமான நாடுகளில் இருந்து அரசுப் பொறுப்புகளில் உள்ளவர்கள், அதிகாரிகளாக பணியாற்றும் தமிழர்கள் வருகை தந்துள்ளீர்கள்.

வேர்களைத் தேடி விழுதுகள் வருவதைப் போல, தாய்மடியைத் தேடி பிள்ளைகள் வருவதைப் போல, தமிழ்நாட்டை நோக்கி நீங்கள் அனைவரும் வருகை தந்திருக்கின்றீர்கள். ஆகவே, உங்கள் அனைவரையும் நம்முடைய தமிழ்நாட்டில் சந்திப்பதில் உள்ளபடியே மிகுந்த மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்கின்றேன்.

இதுபோன்ற சந்திப்புகள்தான், நமக்கு இடையேயான உணர்வை, பாசத்தை இன்னும் அதிகமாக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன். அயலகத்தமிழர்கள் நலனில் நம்முடைய கழக அரசு மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது.

அதற்கு ஒரு உதாரணமாகத் தான் அயலகத் தமிழர் நல வாரியத்தை நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அதில் இன்றைக்கு கிட்டத்தட்ட 26 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள்.

உலக அளவில் தமிழர்களின் உழைப்பும், ஆற்றலும் இன்றைக்கு தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. கூகுள், மைக்ரோசாஃப்ட், ஆப்பிள் என உலகின் அனைத்து தலைசிறந்த நிறுவனங்களிலும், தமிழர்களின் திறமைக்கு தனி மதிப்பு இருக்கிறது. அங்கெல்லாம் முக்கியப் பொறுப்புகளில் தமிழ் மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

வெளிநாடுகளில் தமிழ் மக்களுக்கு எதாவது பிரச்சினை என்றால் அயலகத் தமிழர் நலத்துறை உடனே களத்தில் இறங்கி மீட்டு எடுக்கின்றது. அதற்கு ஒரு உதாரணம். உக்ரைன் – ரஷ்யா போர், இஸ்ரேல் – பாலஸ்தீனம் போர் ஆகியவற்றின் போது, அங்கு படிக்கும் மாணவர்களை நம்முடைய அரசு பத்திரமாக மீட்டு தமிழ்நாடு அழைத்து வந்திருக்கின்றது.

இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 500 பேரை அயலகத் தமிழர் நலத்துறை மீட்டு வந்திருக்கின்றது.

தமிழ்நாடு வாழ் தமிழர்களுக்கு எப்படி திட்டங்கள் தீட்டப்படுகிறதோ, அதே போல வெளிநாடு வாழ் தமிழர்களுக்கும் பல்வேறு திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு தீட்டி செயல்படுத்தி வருகிறது. புலம் பெயர்ந்த மண்ணில் தமிழுக்காகப் பாடுபடும் தமிழ்ச்சங்கங்களுக்கு விருதுகள், கனியன் பூங்குன்றனார் பெயரில் விருது, தமிழ்மாமணி பட்டம் போன்றவை நம் அரசு சார்பில் வழங்கப்படுகின்றன.

இந்த வருடம், புதிதாக வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச்சங்கங்களுக்கும் நமக்கும் இணைப்பை ஏற்படுத்தும் தமிழர்களுக்கு 'சிறந்த பண்பாட்டுத் தூதுவர்' என்ற விருது வழங்கப்படுகிறது. உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் பிள்ளைகள், தமிழ் மொழியை கற்பதற்கு ஏதுவாக, தமிழ்நாடு பாடநூல் கழகம் சார்பில் நூல்களை வழங்கி, அவர்கள் தமிழ் கற்பதற்கான வாய்ப்புகளை திராவிட மாடல் கழக அரசு ஏற்படுத்தியுள்ளது. அயலகத் தமிழர்களின் தமிழ் வளர்ச்சிப் பணிகளை போற்றுகிற வகையில், உலகத்தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு விருதுகளையும், பரிசுகளையும் கழக அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

இப்படி இங்குள்ள தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகம் எங்குமுள்ள தமிழர்களுக்கும் உழைக்கின்ற அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையில், இந்த நிகழ்ச்சியை மிகச்சிறப்பாக ஒருங்கிணைத்திருக்கக் கூடிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் நாசர் அவர்களுக்கும் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த அயலகத் தமிழர் தினம் 2025 மிகப்பெரிய வெற்றியைப் பெறட்டும்.

உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி வணக்கம் என்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ்.எம்.நாசர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர். கலாநிதி வீராசாமி, திரு.எம்.எம்.அப்துல்லா,

அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் திரு.கார்த்திகேய சிவசேனாபதி, மொரிஷியஸ் நாட்டின் மாண்புமிகு வெளியுறவுத் துறை இளைய அமைச்சர் திரு.ராஜன் நரசிங்கன், இலங்கை நாட்டின் மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ரவூப் ஹக்கீம், மலேசியா நாட்டின் மாண்புமிகு பிரதமரின் சிறப்புப் பணி அதிகாரி திரு.சண்முகம் மூக்கன், தென்னாப்பிரிக்கா நாட்டின் கலாச்சார மத மற்றும் மொழியியல் சமூகங்களின் உரிமைகளை ஊக்குவித்தலுக்கான ஆணையர் திரு.ராஜேந்திரன் தங்கவேலு கோவேந்தர், ஐக்கிய அரபு அமீரக பிளாக் துலிப் குழும தலைவர் திரு.முகமது கனி முகமது எஹியா, இங்கிலாந்து நாட்டின் இந்திய வணிக நெட்வொர்க் குழும கௌரவத் தலைவர் திரு.வேலு சிங்கார, ரீயூனியன் தீவின் CCI REUNION தலைவர் திரு.பியர்ரிக் ராபர்ட், அமெரிக்கா நாட்டின் JOGO Health நிறுவனத்தின் தலைவர் மற்றும் இணை நிறுவனர் திரு.சிவா நடராஜா, அமெரிக்கா நாட்டின் Salem Info tech Inc நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிருவாக அலுவலர் திரு.வேர்ட்ஸ்வொர்த் அய்யாத்துரை, பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர்,இ.ஆ.ப., அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் திரு.பா.கிருஷ்ணமூர்த்தி, ஐ.ஓ.எப்.எஸ்., உள்பட அயலகத் தமிழர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**


அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu